மலர் 1 பொள்ளாச்சி. 2—8—51. விலை அரையணா. 6-பக்கம். இதழ் 25

நகரசபைக் கூட்டம்.

27-7-51 ல் பொள்ளாச்சி முனிசிபல் கூட்டம் சேர்மன் ஸ்ரீ சேதுராமசாமி தலைமையில் நடைபெற்றது.

ஆஜர் அங்கத்தினர்கள்.

ஸ்ரீ பொன்னுமுத்துராமசாமிக்கவுண்டர்
,, பொன்னுசாமித்தேவர்
,, தங்கமுத்துக்கவுண்டர்
,, தருமலிங்கக் கவுண்டர்
,, ராமசாமிக்கவுடர்
,, மரியதாஸ்
,, நாச்சிமுத்துக்கவுண்டர்
,, கிருஷ்ணமூர்த்தி செட்டியார்
,, கிருஷ்ணசாமிக்கவுண்டர்
,, வரதராஜ
,, வேலுச்சாமி
,, மகம்மது உசேன் சாயபு
ஸ்ரீமதி தங்கம் அனந்தராம்

ஸ்ரீ வி. எஸ். ஆர். ஏ நாச்சிமுத்துக்கவுண்டரின் தீர்மானங்கள்:—

13-வது வார்டில் மெட்டல் போடுவது காங்கிரீட்போடுவது. ரிவெட்மெண்ட்கட்ட இரட்டைக்குழாய் வைக்க முதலிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பலரோடுகளுக்குஎஸ்டிமேட் சாங்ஷன் செய்யப்பட்டது. பலவேலைகள் செய்யடெண்டர் ஒப்புக்கொள்ளப்பட்டது. மற்றும்பல விஷயங்கள் முடிவுசெய்யப்பட்டது. பூ. துரைக்கண்ணு — வைத்தியநாத அய்யர் இவர்களின் தேநீர் விருந்து நடைபெற்றது.

கலப்படம் செய்தவருக்கு அபராதம்

நம் நகர பெரியசந்தையின் வியாபாரியான ஜனாப் யூசுப் ராவுத்தர் அவர்கள் தேயிலை, காபி இவைகளில் புளியங்கொட்டைப்பவுடரை கலந்துவிற்றதாக சுகாதாரப்பார்வையாளர் ஸ்ரீ என். மாதவன் உண்ணி அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு வழக்கு தொடரப்பட்டதில் சப்மாஜிஸ்டிரேட் ஸ்ரீ கூளப்பா பி. ஏ. பி. எல் அவர்கள் ஷி வியாபாரிக்கு ரூ. 150 அபராதம் விதித்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம்.

பழனியில் 4, 5 தேதிகளில் நடைபெறும்.

ஸ்ரீ லக்ஷிமீபதிராஜுவின் வேண்டுகோள்.

ஆகஸ்ட் 4, 5 தேதிகளில் பழனியில் த. நா. கா. க. கூட்டம் பழனி ஜயராம் டாக்கீஸில் நடைபெறும். வரும் மெம்பர்களை ரயில்வேஸ்டேஷனிலிருந்து தங்குமிடத்திற்கு அழைத்துச்செல்ல சேவாதள தொண்டர்கள் இருப்பார்கள்.

சாப்பாடு வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது. பார்வையாளர்கள் கட்டணம் ரூ. 4-0-0. இவர்களுக்கும் சாப்பாடு தங்குமிடம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வரும் மெம்பர்களும், பார்வையாளர்களும் முன்கூட்டியே வரவேற்புக்கமிட்டியாருக்கு தெரிவித்துவிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கூட்டத்தின் நடவடிக்கைகளை சினிமாப் படம் பிடிக்க ஜுபிடர் கம்பனியார் ஏற்பாடுசெய்துவருகின்றனர். கடிதப் போக்குவரத்துகள் ஸ்ரீ பி. எஸ். கே. லக்ஷிமீபதிராஜு வரவேற்புக்கமிட்டித்தலைவர் பழநி என்ற விலாசத்திற்கு வைத்துக்கொள்ளும்படியும் அறிவிக்கிறார்.

கருப்புச்சட்டையினரின் தில்லு முல்லு!

21-7-51 ம் தேதி சனிக்கிழமை மா
4-மணிக்கு மத்திய சர்க்காரின் வெளிவி
கார இலாகா உதவி மந்திரி டாக்டர் பி.
கேய்ஸ்கர் அவர்கள் கோவை ஒப். எம்.
ஏ. ஹாலில் கோவை ஜில்லா காங்கிர
ஊழியர்கள் கூட்டத்தில் பேசிமுடிந்த
டன் அங்கிருந்து பெருந்திரளான காங்
ரஸ் ஊழியர்களும் மூவர்ணக்கொடிக
கையிலேந்தி " டாக்டர் கேய்ஸ்கர் வரு
வருக " என கோஷமிட்டு நகரின் முக்கி
தெருக்களின் வழியாக ஊர்வலமாகச்செ
ன்று பொதுக்கூட்டம் நடக்கும் இடமா
டவுன் ஹால் மைதானத்திற்கு வந்துசே
ந்தனர். நான்கு நாட்களுக்கு முன்
ஸ்ரீ ஜகஜீவன்ராம் அவர்களுக்கு திடீரெ
கருப்புக்கொடி காட்டிய திராவிடர்கள்
தேசிய இயக்கத்தவர்கள் திருப்பித்தாக்
ஆரம்பித்ததைக் கண்ணுற்றதும் ஒருவா
த்திற்கு முன்னர் விளம்பரம் செய்யப்ப
ட டாக்டர் கேய்ஸ்கரின் வருகையின் மே
து எவ்வித ஆர்ப்பாட்டமும் செய்யாம
வாளா இருந்துவிட்டனர்! டாக்டர் கே
ஸ்கர் 6-மணிக்கு டவுன்ஹாலுக்கு வரு
போது கூடியிருந்த மக்கள் ஏராளமா
மூவர்ணக்கொடிகளை கையிலேந்தி டா
டர் கேய்ஸ்கரே வருக வருக என வாழ்
ற்றனர். ஒரு திராவிடக்குஞ்சும் கூட தி
ம்பிப் போ எனக்கூக்குரலிடாமல் பயந்
வாயைமூடிக்கொண்டு இருந்தன. குப்பு
விழுந்தாலும் மீசையில்மண் ஒட்டவில்
என்பதைப்போலசென்ற 7-ம்தேதி செ
னையில் செய்தி இலாகா உதவி மந்திரி
கும், திட்டக்குடியில் டாக்டர் கேய்ஸ்க
க்கும் கருப்புக்கொடி காண்பிக்க மு
வந்த திராவிட இயக்கத்தினர் கோவை
யில் உதவி மந்திரிகளுக்கு கருப்புக்கொ
காண்பிப்பதில்லை எனவெளியிலே சொ

வி, இழந்த தங்கள் மானத்தை நிலைநிறுத்திக்கொள்ள முயற்சித்து வருகின்றனர். கோவை மக்களின் ஏளன நகைப்பிற்கிடையே!

செல்வாக்கு மிகுந்த தமிழ்
வாரப் பத்திரிகை.

பொள்ளாச்சி 2—8—51. வியாழன்.

சோஷலிஸ்டுக்கள் வாழ்க!

—O—

நல்லதற்கும், கெட்டதற்கும் நாங்கள் ன் தலைவர் என்று எள்ளளவும் மானமி றி எடுத்ததற்கெல்லாம்ஸ்ட்ரைக்செய்ய சாஷியலிஸ்ட் கக்ஷி முன்வந்திருக்கிறது ன்பு இதேகைங்கரியத்தை நம்நாட்டில் யூனிஸ்ட் கக்ஷியினர் செய்து வந்தனர். ப்போது அவர்கள் இருக்குமிடம் தெரி மல் மக்கள் நம்பிக்கையை இழந்து மூலை சார்ந்துவிட்டனர். பொதுமக்கள் அவர்க ருக்கு முடிவுகட்டி விட்டனர்.இப்போது ந்தப் பொன்னான கைங்கரியத்தை சோ லிஸ்டுக்கள் ஆரம்பித்துள்ளனர். ஆகஸ்டு 27 ததி முதல் ரயில்வேஸ்ட்ரைக்செய்வதா பூச்சாண்டிகாட்டி வருகின்றனர். நாட் டுள்ள எல்லாத்தொழிலாளிகளைக்காட் லும் உயர்ந்தநிலையில் உள்ளவர்கள் ரயி வே தொழிலாளிகள். போஸ்டல் தொ லாளிகள் என்று சொன்னால் அதநம்பி கையாகாது. இவர்கள் சங்கம் வைத்துக் கொண்டு கோரிக்கை மேல் கோரிக்கை பாட்டுப்போட்டு அதிக வசதிகளை பெற் ள்ளனர். அதனால் பொதுமக்கள் பெரி தும் பாதிக்கப்பட்டுள்ளனர். சர்க்கார் அ வுக்கு மீறி தாங்கமுடியாத அளவு ரயில் வே கட்டணங்களை உயர்த்தி விட்டனர். இதனால் ஏழைமக்கள் அதிக சிரமப்பட்ட டியிருக்கிறது. இந்நிலையில் இவர்கள் ட்ரைக்செய்தால் மக்கள் ஆதரவை அடி யோடு இழப்பார்கள் என்பது நிச்சயம். ஆகவே வேலைநிறுத்தம் கட்டாயம்வெற்றி அடையப் போவதில்லை. சோஷியலிஸ்ட் கக்ஷியினரும் மூலை சேருவார்கள்.

ஆகவேஸ்ட்ரைக்கைவரவேற்கிறோம். இ ந்திய தேசிய தொழிற் சங்கத்தினர் வேலை நிறுத்தம் செய்யமாட்டோம் என்று தீர்மா னத்தை பாராட்டுகிறோம். போஸ்டல்தொழிலாளர்கள் அனுதாப ஸ்ட்ரைக் செய்யப் போகிறார்களாம். கொழுத்த சம்பளம்வாங்கும் ரயில்வே தொழிலாளி வேலைநிறுத்தம். அதே கொழுத்த சம்பளம் வாங்கும் போஸ்டல்தொழிலாளிஅனுதாப ஸ்ட்ரைக் மற்றதொழிலாளர்கள்ஏமாந்தவர்களா? ஆகவே ஏனைய தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரமும் ரயில்வே தொழிலாளிக்கு சமமாகவேண்டும். அதுவரை அவர்கள்தரத்தை மேற்கொண்டு உயர்த்தாமல் நிறுத்திவைக்கவேண்டும் என்று மத்தியதரவகுப்பாரும் ஏனைய தொழிலாளி வர்க்கத்தினரும் உடனடியாய் கிளர்ச்சியை ஆரம்பிக்கவேண்டும். ஒரு சாராருக்குமட்டும் உயர்த்திக்கொண்டேபோனால் அதனால் பாதிக்கப்படுகிறவர்கள் மற்றவர்கள் என்பதை மனதில் வைக்கக் கோருகிறோம். எப்படியும் வேலை நிறுத்தத்திற்கு இனிமேல் நம் நாட்டில் ஆதரவு கிடைக்காவண்ணம்எடுத்ததற்கெல்லாம் வேலை நிறுத்தம்செய்து அதன் கௌரவத்தைப் போக்கிவிட்ட சோஷலிஸ்டுக்கள் வாழ்க!

(5-ம் பக்கம் தொடர்ச்சி;)

இன்று கரிநாள். ஆடி பூரம். லலிதா விரதம் ஆடிபூரம் தீர்த்தம். இன்று காலை 7-மணிமுதல் 8-30 மணிவரையிலும். மாலை 2-மணி முதல் 3-30 மணி வரையிலும் சுபகாலம். இன்று அதிர்ஷ்ட எண்கள் 5, 8.

6-8-51 (ஆடி 21) திங்கட்கிழமை. வளர்பிறை சதுர்த்தி முழுநாளும். உத்திர நட்சத்திரம் பூரா நாளும். ஜீவன் பாதியும் நேத்திரம் பூஜ்யமும், பூரா நாள் மரண யோகமும், வாரசூலை கிழக்கும், இராகு காலம் 7-30 முதல் 9-மணி வரையிலும் எமகண்டம் 10-30 — 12 வரையிலும், சுபஓரை விடியற்காலை 4மணி முதல் 5-30 மணிவரையிலும் மத்தியானம் 12 மணிமுதல் 12-30 மணி வரையிலும் மாலை 3 மணிமுதல் 3-30 மணி வரையில் சிறுகாரியங்களை செய்யலாம். இன்று விவசாய காரியங்கள் செய்யலாம். இன்று மாச சதுர்த்தி கணேசர் விரதம், சோமவார விரதமும் கௌரி பூஜை. இன்று வசிய எண்கள் 4-1.

7-8-51 (ஆடி 22) செவ்வாய்கிழமை இன்று வளர்பிறை பஞ்சமி முழுநாளும் உத்திரம் நட்சத்திரம் காலை10-43வரையிலும் அதன் பிறகு அஸ்தநட்சத்திரமும் ஜீவன் பாதியும் நேத்திரம் பூஜ்யமும் அமிர்த சித்த யோகம் பூராநாளும் வாரசூலை வடக்குத்திக்கும், இராகுகாலம் பகல்மணி 3 முதல் 4-30 மணி வரையிலும் எமகண்டம் 9-மணி முதல் 10-30 மணி வரையிலும், இருப்பதால்இன்று உகந்தநேரம் காலையில் 8-மணிமுதல் 9-மணி வரையிலும், பகல் 3-மணி முதல் 4-30 மணி வரையிலும் சிறு காரியங்களை ஆரம்பம் செய்யலாம், இன்று நாக பஞ்சமி. இன்று அதிர்ஷ்ட எண்கள் 5, 9.

8—8—51 [ஆடி 23] புதன்கிழமை இன்று வளர்பிறை சஷ்டி முழுநாள். அஸ்த நச்சத்திரம் பகல் 11-18 மணிவரையிலும், அதன் பிறகு சித்திரையும், 13-நாளிகை வரையிலும் மரணயோகமும் அதன் பிறகு சித்தயோகம், இன்று வாரசூலை வடக்கு இராகு காலம் 12 மணி முதல் 1-30 மணி வரையிலும் இருப்பதால் இன்று அதிகாலை 5-மணி முதல் 6-30 மணிவரையிலும். மாலையில் 4-மணி முதல் 4-30 மணி வரை சுப ஓரை நடப்பதால் சிறியகாரியங்கள் செய்யலாம். இன்று சஷ்டி விரதம், கல்கி ஜயந்திஇன்று அதிர்ஷ்டநாள் 6-9.

9--8--51(ஆடி 24) வியாழக்கிழமை.இன்று வளர்பிறை சப்தமி பூராநாளும். சுவாதி நட்சத்திரம் காலை 10-51 மணி முதல் பூரா நாளும், அமிர்தயோகம் பூராநாளும், ஜீவன் நேத்திரமுள்ள நாளும் வாரசூலை தெற்கும். இராகுகாலம் பகல் 1-30 மணிமுதல் 3 மணி வயையிலும், எமகண்டம் காலை 6 மணிமுதல் 7-30 மணி வரையிலும் இருப்பதால் இன்று காலை 8-30 மணி முதல் 10 மணி வரையிலும் பகல் 1 முதல் 1-30 வரையிலும் சாயந்திரம் 4 மணி முதல் 5-30 மணி வரையிலும் சிறு காரியங்களை செய்யலாம். இன்று நாள் நன்றாக இருப்பதால், நாள் செய்வது நல்லோர் செய்யார் என்கிற வாக்கியப்படி காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும். இன்று விவசாய காரியங்களை கவனிப்பதற்கும் நாற்கால் ஜீவன்களை வாங்குவதற்கும் விவாக விஷயங்கள் பேச்சு வார்த்தை ஆரம்பிப்பதற்கும் திருமாங்கல்யம் செய்வதற்கும் மேலதிகாரிகளையும் பெரியோர்களையும் பேட்டி காண உகந்த நாள் இன்று அதிர்ஷ்ட எண்கள் 0-7:

கிரக சஞ்சாரம்.

சூரியன்:- ஆயில்யம் 1, 2, 3 பாதங்களில் சஞ்சாரம்.

செவ்வாய்:- புனர்பூசம் 3, 4 பாதங்களில் சஞ்சாரம்:

புதன்;- பூரம் 1, 2 பாதங்களில் சஞ்சாரம்

குரு;- வக்ர ஆரம்பம் (ஆடி 18).

சுக்கிரன்:- பூரம் 3, 4 பாதங்களில் சஞ்சாரம்.

சனி:- உத்திரம் 4.

இராகு கேது:- சமயம் 4, பூரம் 2.

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட்,
நாகமாணிக்கம் செட்டியார் & பிரதர்,
கடை வீதி

மாடர்ன் கபே,
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

S. P. M. கொடி மஜீத்பீடி.
அங்கு விலாஸ் கடை,
ஏஜண்டு: A. S. B. செட்டியார்.

S. R. V. லாட்ஜிங்கில்
சுகாதார முறைப்படி நல்லகாற்றோட்டமுள்ள ரூம்கள் வாடகைக்கு விடப்படும்.

உங்கள் அபிமானம் பெற்ற
M. குமாரவேல்த்தேவர்,
புஷ்ப வியாபாரம் கடைவீதி.

ஓர் வேண்டுகோள்.

குறைந்த வாடகையில் மின்சார விளக்குகள் ஒலிபெருக்கி, மின்சாரம் இல்லாத இடங்களில் அமைத்துக் கொடுக்கப்படு.

M. சுப்பையாகவுண்டர்,
தலைவர்,
மோட்டார் தொழிலாளர் சங்கம்,
பொள்ளாச்சி.

கண்டியம்மன் கம்பெனி.
கோயமுத்தூர் ரோடு,
மோட்டார், ஆயில் எஞ்சின், பம்ப் செட்கள், எலக்ட்ரிக் சாமான்கள், மற்றும் மெஷினரி சாமான்களும் குறைந்த விலையில் எங்கள் கம்பெனியில் கிடைக்கும்.
உரிமையாளர்:
C. ரங்கசாமிக்கவுண்டர்.

சந்திரன் காலேஜ் ஹைஸ்கூல்.
298, இடையர் வீதி, கோயமுத்தூர்.
ஒரு வருஷத்தில் 14-வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண்கள் E. S. L. C. ஸிக்கும் 20-வயதிற்கு மேற்பட்டவர்கள் மெட்ரிகுலேஷனுக்கும், 9-ம் வகுப்புவரை ஹைஸ்கூல்களிலும் சேரலாம். S. S. L. C. இண்டர் வகுப்புகள் உண்டு. ஹாஸ்டல் உண்டு.
தலைவர்:– **S. R. Chandran.**

வியாபார நிலைமை.

(ஆகஸ்ட் 3 முதல் 9 வரை)

பொன் வெள்ளி இவ்வாரம் குருவின் வக்கிர கதியால் சற்று குறைந்து இவ்வாரக்கடைசியில் சற்று ஏறக்கூடும். அடுத்த வாரம் தங்கம் வெள்ளி இவைகளின் விலை ஏறக்கூடும். உணவு தானியங்களின் விலை இவ்வார மத்தியில் உயர ஆரம்பித்து இவ்வாரக்கடைசியில் நன்றாக உயரும். ஜவுளி பருத்தி நூல் வகைகள் இவ்வாரத்தில் குரு வக்ர ஆரம்பம் (ஆக. 3–ம் தேதி) முதல் உயரும் புகையிலை பாக்கு காப்பிக்கொட்டை நவதானியம் கற்பூரம் உப்பு மிளகு வெல்லம் அஸ்கா சீயக்காய் மிளகாய் முத்துக்கொட்டை மணிலாப்பயறு தேங்காய் வியாபாரிகளுக்கு ஸ்டாக் செய்ததின் மூலம் அதிக நன்மையைத்தரும். ஆக. 3 தேதி முதல் விலை ஏறப்போவதால் 8;ம் தேதிக்குள் விற்பது நலம். இரும்பு வியாபாரிகளுக்கு 3 ம் தேதியில் விலை ஏறப்போவதால் நல்லசமயங்களை நழுவவிடக்கூடாது. ஆகஸ்ட் 8 ம் தேதி பிற்பகல் விலைவாசிகள் திடீரென விழக்கூடும். ஆனால் பருத்தி மார்க்கெட் விறுவிறென்றிருக்கும்

வழிகாட்டுகிறார்கள்.

28-7-51 மாலை டவுன் ரேஷனிங் ஆபிஸில் ஸ்ரீ தர்மலிங்கக்கவுண்டர் தலைமையில் ரேஷன் அட்வைசரி கமிட்டிக்கூட்டம் நடைபெற்றது நேருஜி வேண்டுகோளுக்கு இசைந்து கமிட்டியில் இருப்பவர்கள் எல்லோரும் தங்கள் ரேஷனில் ஒரு நேர உணவை (அதற்குறிய அரிசியை) வாங்கிக்கொள்வதில்லை என முடிவு செய்யப்பட்டது. விலை அதிகமுள்ள அரிசியை ப்போடாமல் நிறுத்திவைக்கவும் சர்க்காருக்கு தெரிவிக்க ஸ்ரீ என். மகாலிங்கம் தீர்மானம் பாஸ் செய்யப்பட்டது. ரேஷனிங் ஆபீஸர் ஸ்ரீ நடராஜ முதலியார் நிலைமையை விளக்கி நீண்டநேரம் பேசினார். தேநீர் விருந்துக்குப்பின் கூட்டம் கலைந்தது.

டவுன் காங்கிரஸ்.

நகர காங்கிரஸ் கமிட்டிக்கூட்டம் தலைவர் ஸ்ரீஎம். ராமசாமிக்கவுடர் தலைமையில் நடைபெற்றது. 6-வது அரசியல் மகாநாட்டின் வரவு சிலவு கணக்கு அங்கீகரிக்கப்பட்டபின் மீதமுள்ள தொகை மைக் வாங்க முடிவுசெய்யப்பட்டது. தேனீயில் நடந்த காங்கிரஸ்கூட்டத்தின்போது அ[illegible] காரிகள் திராவிட கழகத்தினருக்கு உட[illegible] தையாக இருந்து அத்துமீறி நடந்து[illegible] ண்டதைக்கண்டித்தும் அவர்கள்மீது த[illegible] கநடவடிக்கை எடுக்கக்கோரியும்ரயில்[illegible] ஸ்ட்ரைக்கை கண்டித்தும் ஆகஸ்ட் தி[illegible] சிறப்பாக கொண்டாடவும் மற்றும் பல[illegible] ஷபங்கள் முடிவுசெய்யப்பட்டது.

கேள்வி—பதில்

கே: பாக்கிஸ்தானில் நல்லாட்சி ந[illegible] கிறது. மக்கள் அங்கு சுகமாக இருக்கிறா[illegible] கள் என்று தி. மு. கழகத்தினர் கூறுகி[illegible] றனர். ஆனால் கம்யூனிஸ்ட்கள் அங்கு ப[illegible] சம் அக்கிரம ஆட்சி நடக்கிறது என்[illegible] கூறுகிறார்கள். இது ஏன்?

(பி. எஸ், வெங்கிட்

ப: கருப்புக்கும் சிகப்புக்குமுள்ள ஐ[illegible] கிய முன்னணி இதுதான்.

கே. 22-7-51 ல் மயிலஞ்சந்தையி[illegible] நடந்த கூட்டத்தில் நெடுஞ்செழியன் பே[illegible] சும்போது "தென்னாட்டு ராஷ்டிரப[illegible] காமராஜ்" என்று கூறும்போதுமாத்தி[illegible] ஒருவித வலிப்பு உண்டாவதின் காரண[illegible] யாது?

(ஆர். நடராஜன்[illegible]

ப: இது தெரியாத உமக்கு அதிகா[illegible] அவருக்கு காக்கை வலிப்பின் பிரதிபலி[illegible] என்று!

லக்ன ஜோஸியம்.

பூரா ஆயுள் பலன் சொல்ல "பொள்ளாச்சி வாசி" ஸ்பெஷல் கூ[illegible]

முழுப்பெயர்

விலாசம்

ஜாதகமிருந்தால் தனிக்காகிதத்தில் எழுதியனுப்பவும். அனுப்பும் விலாசம்:—

லக்கஜோஸியர் கே. பி. வாசுதேவன்,
453, ஈரோடு, சென்னை 19.

கூப்பனுடன் 14-அணாவுக்கு மணியார்ட[illegible] அல்லது போஸ்டல் ஆர்டர் அனுப்பவு[illegible] ஸ்டாம்புகள் அனுப்பக்கூடாது. கூப்ப[illegible] ல்லாது வரும் கடிதங்களை கவனிக்கப்ப[illegible] மாட்டாது.

"லக்க ஜோசியம்"

(3-8-51 முதல் 9-8-51 வரை.)

இந்த லக்க ஜோசிய முறையில் ஒருவருடைய ஆயுள் வரையில் என்னென்ன பலன்கள் நடக்கும் என்று நிச்சயமாக கூறமுடியும். ஜாதிஷம், ரேகை சாஸ்திரம் ஆருடம் முதலியவைகளால் சொல்லமுடியாத சில விஷயங்களை மிகத்தெளிவாக லக்க ஜோசிய ரீதியாக கூறமுடியும். ஆருட விஷயத்தில் லக்க ஜோசியத்தைதவிட சிறந்தமுறை வேறுகிடையாது.

லக்க ஜோசியம் வியாபார விஷயமாக அதிகமாக உபயோகப்படுகிறது பிறந்த தேதியோ நட்சத்திரமோ அல்லது ஜனனக்குறிப்போ தெரியாவிட்டால் உங்கள் பெயரைக் கொண்டே, பலன்கள் தி டமாக சொல்லமுடியும். உதாரணமாக K. RAMAN. என்ற பெயரை எடுத்துக்கொள்வோம். லக்க ஜோசியப்படி ஆங்கில எழுத்துக்கு பின் வரும் எண்கள் கிடைக்கும்.

1	2	3	4	5	6	7	8	9
A	B	C	D	E	F	G	H	I
J	K	L	M	N	O	P	Q	R
S	T	U	V	W	X	Y	Z	

K RAMAN
2 9 1 4 1 5, 2+9+1+4+1+5 = 22, 2+2=4 இந்த நெம்பர் 4 தான். K. RAMAN என்கிற எண்ணிற்கு வசிய எண். நெம்பர் 4-யை கவனித்தால் பலன்கள் தெரியவரும். அதே மாதிரியாக ஒவ்வொருவருடைய பெயர்களை கணித ரீதியாகசெய்து பலன் பார்க்கவும். அப்படி உங்களுக்கு வசிய எண் தெரியாவிட்டால் எமக்கு எழுதவும். பூரா ஆயுள் பலன்கள் தெரியவேண்டுமானால் லக்கஜோசிய ஸ்பெஷல் கூப்பனைப் பூர்த்தி செய்து 14-அணுவுக்குமணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டர் மூலமாக அனுப்பினால் விபரமான பூரா ஆயுள் பலன் உடனே வரும்.

1 உங்கள் வசிய எண் ஒன்றாக வரின் 3-8-51 இன்று அதிர்ஷ்ட நாள். பிற்பகல் அனுகூலம்.

4-8-51 பண வரவு, பெரியோர்களின் ஆசீர்வாதம், பலநண்பர்களின் பெருந்தன்மை யும்.

5-8-51 இன்று சிலவு, சௌகரியத்தடை, அலைச்சல், சகாயக்குறை, அகால போஜனம் ..ணம்.

6-8-51 இன்று சாதாரண நாள். தெய்வ பிரார்த்தனை செய்வதின் மூலம் சிறிது அனுகூலம்,

7-8-51 இன்று முற்பகல் சுகபோக தனலாபச்செய்தி, புது முயற்சி, காரியனுகூலம்.

8-8-51 நல்ல சந்திப்பு, தைரியம் மகிழ்ச்சி.

9-8-51 இன்று சும்மாயிருப்பதே நலம்.

2 உங்கள் வசிய எண் 2 ஆக வரின், வெள்ளிக்கிழமை (3-8-51) தினம் வீண் குழப்பம், ஜாக்கிரதையாயிருக்கவும். சனிக்கிழமை (4-8-51) காரியக்கேடு பொருள்நஷ்டம், வீண்முயற்சி, அலைச்சலும் கஷ்டமும், [5-8-51] ஞாயிற்றுக்கிழமை, தினம், சுப வார்த்தை கேள்விப் படுதலும், பணவரவு, நற்செய்தியும், திங்கட்கிழமை, (6-8-51) வெண்மை மூலம் தன லாபமும், ஸ்திரி சிநேகமும், மாதர் ஆடை ஆபரண லாபமும் உண்டாகும். செவ்வாய்க்கிழமை. (7-8-51) பந்து மித்திரர்களின் மூலம் துக்க செய்தியும், மனவருத்தமும், (8-8-51) புதன் கிழமை, அசுபநாள், காரியக்கேடு, [9-8-51] வியாழக்கிழமை, லிகித அனுகூலம், மாதர் இசை மகிழ்ச்சி, நாணய ஜயம் உண்டாகும்.

3 உங்கள் வசியஎண் 3 ஆகவரின், 3-8-51 [வெள்ளிக்கிழமை,] மாலை நலம், தித்திப்புணவு, பண உதவி செய்யும் தொழில் மூலம் திரவிய லாபம். குடும்ப க்ஷேமம், சனிக்கிழமை தினம் கால கஷ்டம், போட்டி, ஸ்பெகுலேஷன் முதலிய இனங்களில் மூலம் நஷ்டம். இரவு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். ஞாயிறு சிறு. பயணம், தேக ஜாட்யம், போஜன சௌக்யம், திங்கட்கிழமை, வைராக்கிய உதயம், வர்த்தக வெற்றி, வாழ்க்கை மகிழ்ச்சி, செவ்வாய்க்கிழமை, கௌரவசந்திப்பு, பிரபு பேட்டி. புதன் கிழமை, தெய்வ பக்தி, வியாழக்கிழமை, சுபநாள்.

4 உங்கள் வசிய எண் 4-ஆகவரின் வெள்ளிக்கிழமை இனிய காட்சி, பணவரவு, பெரியோர்கள் சந்திப்பு மாலை நலம். சனிக்கிழமை, காலதாமதம், செலவு, ஞாயிற்றுக்கிழமை விவகாரம், நன்மை, வாகன லாபம், சங்கம், பதவி, திங்கட்கிழமை, தைரியம், பணவரவு மாலையில் உறவினர்மூலம் சகாயம், செவ்வாய்க்கிழமை அற்ப பலன், சும்மாயிருப்பதே நலம்: புதன்கிழமை, தூரச்செய்தி, அதிருப்தி வியாழக்கிழமை நன்முயற்சி, காரிய லாபம்.

5 உங்கள் வசிய எண் 5-ஆகவரின், இவ்வாரம் முழுதும் சுபகரமாகவே இருக்கும். வெள்ளிக்கிழமை, காரியனுகூலம்; சனிக்கிழமை நண்பர் சந்திப்பு; காலைக் கடித வெற்றி; செய்யும் தொழிலில் பொருள் லாபம் கௌரவ சந்திப்பு ஞாயிறு உல்லாச பிரயாணம்.. மாதர் மகிழ்ச்சியும்; திங்கட்கிழமை, காலையில் வீண் விவகாரம் செலவு; நண்பர்கள் சந்திப்பு லிகித அனுகூலம் செவ்வாய்க்கிழமை, மத்திமம். புதன் வியாழக்கிழமை தெய்வ சகாயம் பிரபு தரிசனம்; சர்க்காரிடமிருந்து கடித நன்மை உண்டாகும்.

6 உங்கள் வசிய எண் 6 ஆனால், வெள்ளிக்கிழமை தினம் அலைச்சலும், வீண் சிலவும், பிரயத்தனங்களில் தாமதம் பழையநண்பர்களிடம் மனஸ்தாபமும், சனிக்கிழமை தினம், போட்டி ஸ்பெகுலேஷன் வாய்தா, பேரம் முதலிய இனங்களில் சம்பந்தப்பட்டவர்கள் உஷாராகவே இன்று இருக்க வேண்டும். ஞாயிற்றுக்கிழமை, தனவிரயம், மானபங்கம் கெட்ட செய்தி கேள்விப்படுதலும், திங்கட்கிழமை, புது புது எண்ணங்கள் தோன்றுவதும், நாடகாதி கண் காட்சிகள் காணச்செல்வதும், செவ்வாய்க்கிழமை, குடும்பத்தில் ஒருவருக்கு உடம்பு அசௌகரியத்தால் மனக்கிலேசம் அடைதலும், புதன்கிழமை, இராஜாங்க விவகாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு நல்ல பலனும் வியாபாரிகளுக்கு சிலருக்கு விலைவாசிகளால்' தனலாபமும், வியாழக்கிழமை, ஸ்திரி சுகமும், வாகன லாபமும், உண்டாகும்.

7 உங்கள் வசிய எண் 7 ஆனால், வெள்ளிக்கிழமை குடும்பத்தில் சுபகரமான விசேஷங்கள் நடைபெறும். சனி, ஞாயிறு கிழமையில் உல்லாச யாத்திரை செல்வதும், ஸ்திர சொத்து சம்பந்தமாக, பணக்கார முதலாளிகளுக்கு அனுகூலமாகவும், திங்கட்கிழமை, குடும்பத்தில் பரஸ்பர ஒற்றுமையும் தெய்வபக்தியும், மாமன் வர்க்க பந்துக்கள .. நகையும் செவ்வாய்க்கிழமை, மனதி.. ற்சாகமும், எதிர்பாராதயிடத்தில் ..ண வசதிகளும், புதன்கிழமை, மத்திபபலனும் இருப்பதால் இன்று சும்மாயிருப்பதே நலம். வியாழக்கிழமை, அனுகூலமான நாள்.

8 உங்கள் வசிய 8 ஆகவரின், வெள்ளி, சனி, ஞாயிறு கிழமைகளில் எவ்வித சுபபலனும் எதிர்பார்க்கமுடியாது. இம்மூன்று தினங்களில் சும்மாயிருப்பதே நலம். திங்கட்கிழமையன்று குடும்பத்தில் சிறு குழந்தைகளுக்கு நலி காணுவதின் காரணமாக மனக்கிலேசமும் செவ்வாய் புதன் கிழமைகளில் சிறிது அனுகூலமும் வியாழன் கிழமையில் பணவசதி சிறிது உண்டாகும். பொதுவாக இவ்வாரத்தில் சுபமும் அசுபபலனும் கலந்து காணப்படுகிறது. நெம்பர் 8 நபர்கள் இவ்வாரத்தில் புதிய இனங்களை ஆரம்பிப்பது அவ்வளவு நல்லதல்ல. போட்டி ரேஸ் ஸ்பெகுலேஷன் முதலிய இனங்களை தொழிலாக நடத்துவோர்களுக்கு இவ்வாரம் அதிக உஷாராக இருக்கவேண்டும். பணக்கார முதலாளிகள் ஸ்திரசொத்து விஷயமாக ஒருவித மாறுதலையும் செய்யக்கூடாது. தொழிலாளிகள் முதலாளிகளிடம் அதிகமாக பேச்சுவார்த்தைகள் பேசக்கூடாது. உத்தியோகஸ்தர்களும் குடும்பஸ்தர்களும் பொதுவாக எல்லாவியாபாரிகளும் இவ்வாரம் காலமாறுதலை அனுசரித்து நடப்பதே நலம்.

9 உங்கள் வசிய எண் 9 ஆனபடியால் இவ்வாரம் சென்ற வாரங்களைவிட சுமாராகயிருக்கும். வெள்ளி சனி ஞாயிறு கிழமைகளில்பணவரவும். திங்கட்கிழமை பெரியோர்களின் அனுக்கிரகத்தால் நன்மையும் செவ்வாய்க்கிழமை தொழில் சம்பந்தமான வகையில் நல்லவருமானமும் புதன் வியாழக்கிழமைகளில் தூரதேசத்திலிருந்து சுபகரமான தகவல் கிடைப்பதும் அதிக பணவசதியுமுண்டாகும்.

"லக்க ஜோசியம்"

தினக் குறிப்பு.

K. B. V.

3-8-51 (ஆடி 18) வெள்ளிக்கிழமை இன்று வளர்பிறை பிரதமை பூரராநாளும் ஆயில்ய நச்சத்திரம் பூராநாளும். நேத்திரம் ஜீவன் பூஜ்ஜிய்மும் பூரா நாள் மரண யோகமும் வாரசூலை மேற்கு இன்று ஆடி 18-ம் பெருக்கு ஆனபடியால் கப்பல்யாத்திரை தாராளமாகச் செய்யலாம். எமகண்டம் ராகுகாலம் நீக்கி சிறு காரியங்களை இன்றுகாலை 6-மணிமுதல் 7-30 ம[illegible]குள்ளாகவும் மத்தியானம் 1 முதல் 2 மணிக்குள்ளாகவும் மாலையில் 5 மணி[illegible]ல் 5-30 வரையும் சிறந்த ஓரையாகு[illegible] இன்று இராவேந்திரசாமிபுண்ணியதினம் இன்று வசிய எண்கள் 5, 1.

4-8-51 (ஆடி 19) சனிக்கிழமை. இன்றுவளர்பிறை. துதிகை பூராநாளும். மகநச்சத்திரம் பூராநாளும். நேத்திரம் ஜீவன் பூஜ்ஜியம், 43 நாழிகை அமிர்த[illegible]யோகமும், கிழக்கு வாரசூலை இராகு கா[illegible]லை 9 மணி முதல் 10-30 வரையிலும், எமகண்டம் 1-30 முதல் 3 வரை சந்திர தரிசனம் காலை 7-மணிமுதல் 7-30 மணிவரையிலும் 10 மணி முதல் 11-30 மணி வரையிலும், மாலை 5-மணிமுதல் சூரிய அஸ்தமனம் வரையில் சுபஓரை. இன்று வசிய எண்கள் 0, 2.

5-8-51 (ஆடி 20) ஞாயிற்றுக்கிழமை இன்று வளர்பிறை திருதிகை முழுநாளும் பூரநச்சத்திரம் பூராநாளும், நேத்திரம் ஜீவன் பூஜ்ஜியம். இன்று வாரசூலை மேற்கு

(2-பக்கம் பார்க்க;)

உலகப் பிரசித்திபெற்ற பல்லடம்

உரிமையாளர்:

P. A. ரஹீம் சாயபு,

பல்லடம்.

ஏஜண்ட்:

A. K. யாகூப் சாயபு,

பொள்ளாச்சி.

குயில் மார்க் பீடிகளையே வாங்கி

உபயோகியுங்கள்.

கவுண்டர் & கம்பெனி

லிமிடெட்,

கூட்ஷெட் ரோடு, பொள்ளாச்சி.

போர்டு; செவர்லெட்

இகா மோட்டார்களுக்கு அவசியமான உறுப்புகள்,

டயர், டியூப்புகள், பேட்டரி வகைகள்

விற்பனை செய்யப்படும்.

பஸ், லாரி பாடிகள் போட்டுக்கொடுப்பதுடன்,
எல்லாவிதமான மோட்டார் ரிப்பேர்களும்
செய்து கொடுக்கப்படும்.

அறிவிப்பு.

உறுதிக்கும், நேர்த்தியான வேலைப்பாட்டிற்கும்
சிக்கனத்திற்கும் உத்திரவாதமுள்ள

டால்மியா போர்ட்லண்டு
சிமிட்டியை

யாவரும் எளிதில் பெற்று உபயோகிக்கும் பொருட்டு

பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை,
பழனி

ஆகிய இடங்களில் கடைகள்
திறக்கப்பட்டிருக்கின்றன.

நா. மகாலிங்கம்,

டால்மியா சிமிட்டி ஏஜண்டு, **பொள்ளாச்சி.**

போன் நெம்பர். 63.

தபால் பெட்டி நெ. 25.

N.B :— ரெடிமேடு பவுன் நகைகள் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

Prop: B. பாலமாணிக்கம் செட்டியார்
& பிரதர்ஸ்.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi